செ.வெ.எண்: 39/2018 நாள்: 11.01.2018

**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**நாகர்கோவில்.**

**ஹெச்/29960/2017**

**பத்திரிகைச்செய்தி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 30.11.2017 அன்று தாக்கிய ஓகி புயலின் காரணமாக 33 சதவீதத்திற்கும் அதிகமாக பாதிக்கப்பட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு பயிர் சேதம் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கிட கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதில் பாதிக்கப்பட்ட 5467.52 ஹெக்டேர் தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணமாக ரூபாய் ஒன்பது கோடியே முப்பத்து ஏழு லட்சத்து எட்டாயிரம் மட்டும் மற்றும் பாதிக்கப்பட்ட 537.658 ஹெக்டேர் வேளாண்மை பயிர்களுக்கு ரூபாய் எழுபத்து ஒன்பது லட்சத்து ஆறாயிரத்து ஐநூற்று மூன்று மட்டும் வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத்தொகை வரவு வைக்கப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.